# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## நடப்பு நிகழ்வுகள்

### நாள்: 24 /06/2024



# தமிழ்நாடு

## பெரும்பாலை அகழ்வாராய்ச்சி

- காவிரி ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றான **நாகாவதி** (பண்டைய பாலாறு) **கரையில்** பெரும்பாலை அமைந்துள்ளது.
- **கொங்குமண்டல சாதகம்**, 13 ஆம் நூற்றாண்டின் **விஜயமங்கலம் கார்மேககவிராயர்** என்பவரின் இலக்கியப் படைப்பாகும், இது இன்றைய கோவை, ஈரோடு, திருப்பூர் மற்றும் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களின் சில பகுதிகளை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தின் வடக்கு எல்லையாக பெரும்பாலை அமைந்துள்ளது என்று குறிப்பிடுகிறது.
- தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாளையத்தில் தமிழக அரசின் தொல்லியல் துறையினர் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகளில் **வடிவியல் குறியீடுகளை ஒத்திருக்கும் கிராப்டி (சுவர்ரெழுத்துகள் ) குறியீடுகள்** காணப்படுகின்றன .




- AMS (Accelerator Mass Spectrometry technique) தேதிகளின்படி, தளத்தின் மிகக் குறைந்த நிலை **கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கு** முந்தையது.
- தோண்டப்பட்ட ஆரம்பகால வரலாற்றுத் தளங்களான **வல்லம், கொடுமணல், கீழடி, உறையூர், கரூர்** மற்றும் பல இடங்கள் எப்போதும் **தமிழி (தமிழ்-பிராமி)** - பொறிக்கப்பட்ட பானை மற்றும் கிராப்டி குறியீடுகளை கொடவையாகவே உள்ளன

**<u>அன்னிய நேரடி முதலீடு 2023-24 -தமிழ்நாடு :</u>**

- 2022-23ல் 2.17 பில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் அன்னிய நேரடி முதலீடு 2023-24 நிதியாண்டில் சுமார் 2.44 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

## அறிவியல் தொழில்நுட்பம்

**<u>புஷ்பக் விமானம் (Pushpak )- RLV LEX-03 திட்டம்:</u>**

**நிகழ்வு :**

- இஸ்ரோ அதன் **மூன்றாவது 'புஷ்பக்' என்ற மறுபயன்பாட்டு ஏவுகணை** (RLV -Reusable Launch Vehicle) தரையிறங்கும் பரிசோதனையினை (LEX) கர்நாடகாவின் **சித்ரதுர்காவில்** உள்ள வானூர்தி பரிசோதனை தளத்தில் (ATR) நிறைவு செய்தது.

**தேர்வுக்கு தேவையானவை :**

- புஷ்பக், "**சுதேசி விண்வெளி விண்கலம்**" என்று அழைக்கப்படுகிறது .
- இது இந்தியாவின் எதிர்கால **மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏவுகணை** (Reusable Launch Vehicle) ஆகும்.




- இந்த ராக்கெட்டின் பெயர் ராமாயணத்தில் உள்ள '**புஷ்பக் விமானம்**' இலிருந்து வந்தது.

https://t.me/ChinmayaTnpsc

- இது ஒரு முழுமையான விண்வெளி ராக்கெட்டாகவும் , முழுமையாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய **ஒற்றை நிலை-விண்வெளி சுற்றுப்பாதை (SSTO - Single Stage to Orbit) வாகனமாகவும்** வடிவமைக்கப்பட்டுள்ளது.
- **RLV LEX-01 திட்டம் -ஏப்ரல் 2, 2023**.
- **RLV LEX-02 திட்டம் - மார்ச் 22, 2024.**



**<u>மைக்ரோ ஆர்என்ஏ - மார்பக புற்றுநோய் கண்டறிதல் :</u>**

**நிகழ்வு**

திருவனந்தபுரத்தில் உள்ள பிராந்திய புற்றுநோய் மையத்தின் **(RCC)** மருத்துவர்களுடன் இணைந்து, சிஎஸ்ஐஆர் செல்லுலார் மற்றும் மாலிகுலர் பயாலஜி மையத்தின் (**CSIR-CCMB**) விஞ்ஞானிகள், ஒரு துளி இரத்தம் மூலமாக பல்வேறு வகையான **மார்பக புற்றுநோயைக்** கண்டறிவதற்கான சாத்தியமான செலவு குறைந்த தொழில்நுட்ப முறையைக் கண்டறிந்துள்ளனர்.

**தேர்வுக்கு தேவையானவை**

- **மைக்ரோ ஆர்என்ஏ:**
  - ✓ உடலில் உள்ள பெரும்பாலான செல்லுலார் செயல்முறைகள் மைக்ரோ ஆர்என்ஏ என்ற மூலக்கூறுகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
  - ✓ அவை 23-25 நியூக்கிளியோடைடு ஆர்என்ஏ மூலக்கூறுகளாகும்.
  - ✓ மார்பக புற்றுநோயின் துவக்கம் மற்றும் அதிகரிப்பு செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டுள்ள மைக்ரோ ஆர்என்ஏக்களை அடையாளம் காண்பது, ஆரம்பகால நோயறிதல் மற்றும் முன்கணிப்புக்கான உயிர் குறிகாட்டியாக அமைந்துள்ளது.
- புற்றுநோய் செல்கள்களின் டிஎன்ஏ/ஆர்என்ஏவை ' **சுற்றிவரும் நியூக்ளிக் அமிலங்கள்** (CNA) என்றழைக்கப்படும்.
- டிஎன்ஏ, ஆர்என்ஏ மற்றும் புரதங்கள் உள்ளிட்ட புற்றுநோய் சார்ந்த மரபணு மாற்றங்கள், பிளாஸ்மா அல்லது புற்றுநோயாளிகளின் பிற உடல் திரவங்களில் கண்டறியபடகூடியவை.புற்றுநோய்

வளர்ச்சியின் நிலைகளை இந்தக் கொள்கையின் அடிப்படையில், ரத்தத்தில் அடையாளம் காணப்படகூடியவை

